Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 08 22- 06 - 94 புதன்கிழமை ஓசை 124

## கோப்பி தேநீருக்குப் பிரதியீடாக சித்த மருத்துவ 'நன்பானம்' அறிமுகம்

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தினர் முதன்முதலாக; கோப்பி, தேநீர் போன்ற சுகாதாரக் கேட்டை விளைவிக்கும் அந்நிய பானங்களின் பிரதியீடாக ''நன்பானம்'' என்னும் பெயரில் சுவை மிகுந்ததும் அதேவேளை ரோக நிவாரண பலனை வழங்கக்கூடியதுமான பானமொன்றினை உற்பத்தி செய்து மக்கள் மத்தியில் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர், தமிழருக்குச் சொந்தமான சித்த மருத்துவத்தின் பக்குவத்துடன் தகுதிபெற்ற வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனையின்கீழ் இதுதயாரிக்கப்பட்டதுடன் பரீ (6ஆம் பக்கம் பார்க்க)



விமானக் குண்டுவீச்சைக் கண்டித்து நேற்று கூட்டுறவாளர்களால் யாழ்நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும், யாழ். அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்கவாசகரிடம் மகஜர் கையளிக்கப்படுவதனையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

# விமானக் குண்டுவீச்சை கண்டித்து

# நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

## கூட்டுறவாளருடன் மக்களும் கலந்து கொண்டனர்

## வாக்காளர் பட்டியலில் ராணுவத்தினர் பெயர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களை முன்னிட்டு வவுனியாவிலுள்ள சிறிலங்காப் படை சிப்பாய்களினதும் பெயர்கள் வவுனியா மாவட்ட வாக்காளர் பட்டியலில் சேர்க்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

இப் பகுதியில் இம் மாதம் வாக்காளர் பதிவுகள் புதிப்பிக்சப்படும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வவுனியாவில் நிறுத்தப்பட்டுள்ள ராணுவத்தினரின் பெயர்ப் பட்டியல்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் தயார் செய்யப்பட்டு வாக்காளர் பதிவுகளில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுமார் 10 ஆயிரம் பெயர்களை கொண்ட பட்டியல்கள் இரு மொழிகளிலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதாக தெரியவருகிறது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹொலன்ட், டென்மார்க் அகதிகளை அனுப்ப முயற்சி

(ஜெனீவா)

இலங்கை அகதிகளை சுவிஸ் சர்லாந்து திருப்பியனுப்பும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதையடுத்து ஹொலன்ட்டும், டென்மார்க்கும் அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகின்றன, முதற்கட்டமாக சுவிஸ் அரசும் ஹொலன்ட் அரசும் தலா 15,000 அகதிகளை திருப்பியனுப்பத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

இத்திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐ, நா. உயர்ஸ்தானிகராலயம் கண்காணிக்கும் எனினும் இத்திட்டத்தை பல உதவி வழங்கும் நிறுவனங்களும் அகதிகள் பராமரிப்புக் குழுக்களும் கண்டித்துள்ளன, இது குறித்து இவை இன்று ஜெனீவாவில் யூ. என் எச், சீ. ஆர். தலைமையலுவலகத்தில் கூடியாராயவுள்ளன,

## 923 படையினருக்கு கௌரவ விருது

# கூட்டுறவாளருடன் மக்களும் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா விமானப்படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலைக் கண்டித்து பல ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட மாபெரும் கண்டனப் பேரணி நேற்று யாழ். நகரில் நடைபெற்றது. யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்களால் நடாத்தப்பட்ட இக் கண்டனப் பேரணியில் கூட்டுறவாளர்களும் பொது மக்களும் பலவித கண்டனச் சுலோகங்களைத் தாங்கி கோஷம் எழுப்பியவாறு கலந்து கொண்டனர்.**

கடந்த 22-ம் திகதி நீர்வேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. வே. சின்னத்தம்பி நீர்வேலியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் கொடூரமாக கொல்லப்பட்டதைக் கண்டித்து நடாத்தப்பட்ட இவ் ஆர்ப்பாட்டப் பேரணி யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை முன்றலிலிருந்து காலை 10.40 மணிக்கு ஆரம்பமாகியது

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப் பேரணி ஆஸ்பத்திரி வீதிவழியாக ஸ்ரான்லி வீதியை அடைந்து அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அடைந்தது அங்கு யாழ் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பேரணியினர் அங்கிருந்து கோவில் வீதியூடாக யாழ். செயலகத்தை சென்றடைந்தனர்.

அங்கு வைத்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மகஜரை பேரணியினர் மத்தியில் வாசித்துக் காட்டப்பட்டபின் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் அம் மகஜரை கையளித்தனர்.

இதன்போது இப் பேரணியில் கலந்துகொண்ட பொது மக்கள்;சிங்கள அரசே உனக்கு சிதைக்கக் கிடைத்தது தமிழரின் சிரசா, புத்த தர்மத்தில் புக்காராவும் ஒன்றா, சிங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 923 படையினருக்கு கௌரவ விருது

## தெரிவுகுறித்து அதிகாரிகள் அதிருப்தி

சிறிலங்கா முப்படைகளைச் சேர்ந்த 923 பேர் நேற்று ஜனாதிபதியிடம் இருந்து படையினருக்கான கௌரவ விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். இவ்விருது வழங்கல் வைபவத்தில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவிற்கும் மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண ஆகியோருக்கு ரணவிக்ரம பதக்கங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக இவர்களுக்கு படை அதிஉயர் விருதான பரமவீர விபூஷணய விருது வழங்க சிபார்சு செய்யப்பட்டதும் எனினும் இது பாதுகாப்பு அமைச்சினால் நிராகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ் விருது வழங்கலுக்காக சிபார்சு செய்யப்பட்ட சிலர் விருதுவழங்கு சபையில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளுக்கு நெருங்கியவர்கள் எனவும் சிலர் அரசியல்வாதிகளுக்கு நெருங்கியவர்கள் எனவும் புகாரிடப்பட்டுள்ளது.

முன்னணியில் நின்று போராடியவர் மற்றும் முன்னணி வீரர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள அதே வேளை கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பாதுகாப்பாக இருக்கும் சிலர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விமானக் குண்டு வீச்சினால் எதுவித பயனுமில்லை

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறினாராம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் குடியிருப்புகள்மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்துவதால் எதுவித பலனும் கிடைக்கப்போவதில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தன்னிடம் கூறியதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டு மக்கள் குடியிருப்புகள்மீது சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலைக் கண்டித்து கூட்டுறவாளர் மாபெரும் கண்டனப் பேரணியின் இறுதியில் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். இம் மகஜரைப் பெற்றுக்கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும், அண்மையில் நீர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு பலர் முட்டுக்கட்டை போடுகின்றனர்

## பின்வாங்கப் போவதில்லை என்கிறார் ஹமில்டன்

(கொழும்பு)

இன்று எம்முன்னால் உள்ள முக்கிய விடயம் வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் ஆகும். இது இன்று உச்ச கட்டத்தில் உள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவரமுடியாது முட்டுக்கட்டை போடுவோர் இன்று அதிகமாக உள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பிரபல பாடசாலையொன்றில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,குறுகிய லாபநோக்குடன் அதனை இடைநிறுத்தப் பலர் முனைகின்றனர் பிழையான தகவல்களை அடிப்படையாக கொண்டு சுயலாபம் பெறும் நோக்கில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதனையடுத்து பத்திரிகைகள் சிலவற்றைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டு எனது முகத்திற்குச் சேறு பூசும் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர்- இவர்களில் எனது நண்பர்கள் சிலரும் இருக்கின்றனர்.

இது போன்ற நடவடிக்கைகளினால் எனது திட்டங்களிலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை. வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு முடிவு வரும் வரை எமது கவனத்தை வேறெதிலும் திசை திருப்ப முடியாது என அவர் குறிப்பிட்டார்.

# வடக்கே வெளிநாட்டாரை அனுமதிப்பது ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தானது

## வெளியுறவு அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகள் தற்போது இருக்கும் நிலையில் வெளிநாட்டுப்பிரதிநிதிகளை அங்கு விஜயம் செய்ய அனுமதிப்பது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தானது என வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவரை வடபகுதி செல்ல அனுமதி மறுத்தமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி வட்டாரங்கள் இவ்வாறு குறிப்பிட்டிருந்தன.

31-5-94 திகதியிட்ட கடிதம் ஒன்றில் அமெரிக்கத் தூதுவர் தமது தூதரக பிரதிநிதி ஒருவர் வடபகுதி செல்ல வெளியுறவு இராஜாங்க அமைச்சரிடம் அனுமதி கோரி இருந்தார். அத்துடன் இது தொடர்பாக அவர் பிரதமர் ரணிலுடனும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டனுடனும் நேரிலும் பேசியதாகவும் தெரிய வருகிறது.

1990 ஜூனில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படை முகாம்களைத் தாக்க புலிகள் தயார் நிலையில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலுள்ள சிறிலங்கா படை முகாம்கள்மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் தயார்நிலையில் இருப்பது குறித்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்கு ஆயுதங்களுடன் நடமாடும் பொலிசார்மீதும் இராணுவத்தினர்மீதும் தாக்குதல் நடத்துவதாகும் என தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அவ் வட்டாரங்கள் கூறுகின்றன.

விசேடமாக கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன

## வரி விளம்பரம்

### நினைவுகள் அழிவதில்லை

பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட கையூர் தியாகிகளின் வீரக்கதை. விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். (8568)

### வருடாந்த உற்சவம்

நல்லூர் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். இறுதி நாளான 01-07-94ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் சங்காபிஷேகமும், மாலை அம்பாள் வீதியுலாவும் நடைபெறும். திருவிழாத் தினங்களில் காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் தமிழருவி திரு, த. சிவகுமாரன் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

### தேர்த்திருவிழா

(மானிப்பாய்)

பிரசித்தி பெற்ற நவாலி அட்டகிரி ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து அடுத்த தினம் பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (7)

### இலக்கியப் பயிலரங்கு

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் இலக்கியப் பயிலரங்கு எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் பிற்பகல் 3-30 மணியளவில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்அரங்கில் சமகால இலக்கியக் கொள்கைகளும் தமிழ் இலக்கியமும் என்னும் பொருளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி உரை நிகழ்த்தவுள்ளார்.


### விற்பனைக்கு

கொழும்பு

சீமெந்து, வாட்பிளேட்


# குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதலை நிறுத்துக; யாழ். கூட்டுறவாளர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெறுமதி மிக்க மனித உயிர்களுக்கு மதிப்பளித்து, குடியிருப்புக்களை நோக்கி விமானக் குண்டு வீச்சு எறிகணைத்தாக்குதல்கள்பீரங்கித் தாக்குதல்கள் உடன் நிறுத்த வேண்டும் எனவும் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தலைவர் வே. சின்னத்தம்பி அவர்களும், அவாது மகள் சி. சிவதர்சினி, மருமகள் புஸ்பராணி ஆகியோர் விமானக் குண்டு வீச்சால் அநியாயமாகக் கொல்லப் பட்டதையிட்டு வீசாரணை மேற்கொள்ளப் பட வேண்டும் எனவும் யாழ், மாவட்டத்திலுள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை நடைபெற்ற கண்டனப் பேரணியைத் தொடர்ந்து இம்மகஜர் அனுப்பிவைக்கப்பட்டது.

இம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

யாழ் மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள், தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள், புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், யாழ் மாவட்டக் கூட்டுறவாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து, விமானக் குண்டு வீச்சால் அநியாயமாக கொல்லப்பட்ட எமது தலைவர்களில் ஒருவரான வே. சின்னத்தம்பி அவர்களின் இழப்பைக் கண்டித்து யாழ் நகரில் மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை நடாத்தி மகஜர் ஒன்றை யாழ் அரச அதிபரூடாக தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். இதற்கு தாங்கள் உரிய நடவடிக்கையை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

தன்னாட்சி பெற்ற பூரண சுயநிர்ணய உரிமையோடு அமைதி, சமாதானம், சுமுகமான வாழ்வை விரும்புகின்ற தமிழ் மக்களுக்கு எதிராக பல ஆண்டுகளாக பாரிய அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டு மிகக் கொடிய யுத்தம் ஒன்றை நடாத்துகின்றீர்கள்.

உலக வரலாற்றில் இவ்வாறான அர்த்தமற்ற போரில் ஈடுபட்டவர்களின் கறைபடிந்த வரலாறுகளையும், போரிகளை கூட்டுறவாளர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு ஊழியர்களும் சந்தித்து இருக்கின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பல கோடிக் கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன இத்தனை இழப்புக்களின் மத்தியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணித்து வருகின்றன.

இன்றைய யுத்த சூழலில் யாழ் மாவட்ட மக்கள்பெரும் கஷ்டங்களையும், துன்பங்களையும் தழுவிக் கொள்ள நேரிட்ட போதெல்லாம் கூட்டுறவுத் துறையினால் போர்க்கால சூழலிலும், யுத்தப் பிரதேசங்களிலும் நின்று எறிகணை வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சு, பீரங்கித் தாக்குதலுக்கு மத்தியிலும் அதற்கு மேலாக பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியிலும் தளராது, நேரகாலம் பாராது மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர் என்பதனை இங்கு சுட்டிக் காட்டவிரும்புகின்றோம்.

அதே வேளையில் கூட்டுறவுத் துறைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு தலைவனுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலையை எடுத்துரைக்க வேண்டியது எமது பொறுப்பும், கடமையும் ஆகும் ஏனெனில் இவ்வாறான நிகழ்வு எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுப்பது தங்கள் கடமையாகும்.

தமிழ்ப் பிரதேசங்களில் இன்று அடிக்கடி வானத்தில் வட்டமிடும் குண்டுவீச்சு விமானங்கள் அர்த்தமில்லாமல் குண்டு வீசுவது தொடர்கதை இதனால் அப்பாவி பொதுமக்கள் பலியாவதும் பொது நிகழ்வாகி விட்டது இவற்றின் மத்தியில் 22-5-94 காலை 7,00 மணியளவில் கோப்பாய் தொகுதியிலுள்ள கரந்தன் நீர்வேலி என்னும் இடத்தில் வசித்து வந்த நீர்வேலி ப.நோ.கூ. சங்க தலைவர் இல்லம் விமானக் குண்டு வீச்சிற்கு உள்ளாக்கப்பட்டது அதேவேளை தனது வீட்டுத் தோட்டக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த தலைவர் திரு வே சின்னத்தம்பி அவர்கள் வயது 60 அநியாயமாகக் கொல்லப்பட்டதுடன் அவரது மகளான சி. சிவதர்சினி வபது-18, மருமகளான புஸ்பராணி வயது - 28 ஆகியோர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதினால் அவர்களின் குடும்பமே நிர்க்கதியாகியுள்ளது இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்...

தொண்டு ஆற்றி மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்று கூட்டுறவுத் துறைக்கு ஒரு நம்பிக்கையின் நட்சத்திரமாக விளங்கிய ஒரு தலைவரை இழந்து நிற்கின்றோம். அதேவேளை அவருடைய ஏகபுதல்வியும், வேம்படி மகளிர் கல்லூரியில் மிகத் திறமை சித்திகளைப் பெற்று உயர் வகுப்பில் முதன்மை மாணவியாக திகழ்ந்த செல்வி சி. சிவதர்சினியும், அவரது மருமகளும் வாழ வேண்டிய வயதில் கொல்லப்பட்டனர் இந்நிகழ்வானது நாகரீக உலகில் ஜீரணிக்க முடியாத செயலாகும் என்பதை தங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இன்று யாழ் மாவட்டத்தில் என்ன நடக்கிறது, சற்று சிந்தியுங்கள் எமது மக்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களும், மக்கள் கூடும் சந்தைகள் பொது இடங்கள், ஆலயங்கள் மீது விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களும், பீரங்கிப்படகுகளிலிருந்து பீரங்கித்தாக்குதல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன இதனால் பெறுமதியான உயிர்கள் பலியாகின்றதுடன், பெறுமதியான வளங்கள், வாழ்விடங்கள், உடைமைகளும் அழிக்கப்படுகின்றன இது சர்வதேச மனித உரிமைகளை மீறுகின்ற செயலாகும் 1994 யூன் 08-ம்திகதி தொடக்கம் 1994 யூன் 14-ந் திகதி வரை யாழ் நகர்ப் புறப்பகுதிகளை நோக்கி இரவு பகலாக மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சால் ஆறு (6) அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் அன்றாடம் உழைத்து சீவித்து வந்த சுமார் 42 அப்பாவி பொதுமக்கள் படுகாயமடைந்தனர் இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர் இதனால் இவர்களின் எதிர்காலம் மிகக்கவலைக்குரியவை

எனவே இவ்வாறான நிகழ்வுகளை நிறுத்துவதற்கு பின்வரும் கோரிக்கைகளை தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம் இவற்றை கவனத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

01. நீர்வேலி ப. நோ. கூ. சங்க தலைவர் வே, சின்னத்தம்பி அவர்கள், அவரது மகள் சி, சிவதர்சினி. மருமகள் புஸ்பராணி ஆகியோர் விமானக்குண்டு வீச்சால் அநியாயமாகக் கொல்லப்பட்டதை இட்டு விசாரணைமேற்கொள்ளப்பட வேண்டும்

02. தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞைகளை புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏற்ப பொருளாதார தடையை நீக்கி சுமுகமான நிலையை உருவாக்கி அர்த்தமற்ற போர் உடன் நிறுத்தப்பட வேண்டும்

03. பெறுமதிமிக்க மனித உயிர்களுக்கு மதிப்பளித்து, குடியிருப்புக்களை நோக்கி விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல், எறிகணை வீச்சுக்கள், பீரங்கித்தாக்குதல்களை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## சு.க.வின் பா. உகள் 9பேர் விரைவில் ஐ.தே.க வில்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒன்பது பேர் அடுத்த மாத முற்பகுதியில் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது. அடுத்த பொதுத் தேர்தலின் போது இவர்கள் தத்தம் தொகுதிகளில் ஐ.தே.க.சார்பில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், உயர்கல்வி அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா ஐ தே க பொதுச் செயலாளர் டாக்டர் காமினிவிஜயசேகர ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ள இவர்கள் ...ள்ளனர்.

இவ்வாறு கட்சி மாறவுள்ள ஒன்பது பேரில் நால்வர் மேல் மாகாணத்தையும், ஒருவர் வடமேல் மாகாணத்தையும் சேர்ந்தவர்கள் ஏருவர் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்தவர்,.

இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தமது முடிவுக்கான காரணத்தை விளக்கி அறிக்கை வெளியிட இருப்பதாகவும், இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பில் ஒரு இல்லத்தில் தொடர்ச்சியாக சந்தித்து பேசி வருவதாகவும் உயர்கல்வி அமைச்சர் அநுரா தெரிவித்தார் எனினும் இவர்...

## நினைவு கூருகின்றோம்... 22 06-1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-ஒட்டகப்புலம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**முருகேசு** (வேலுப்பிள்ளை சிறிமுருகதாஸ் - ஒட்டகப்புலம், வசாவிளான் - யாழ்)

1987ஆம் ஆண்டு மட்டு சிறிலங்கா அதிரடிப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய, மட்டு பிரதேசத் தளபதியான,

★ **பொன்னன்** (பாக்கியராசா பொன்னம்பலம் - மட்டு)

மட்டு - வாழைச்சேனை - கறுவாச்சோலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**நிசன்** (வேலு மதிவாணன் - பெரியபுல்லுமலை - மட்டு)

**இராகவன்** (சுப்பிரமணியம் தியாகராசா - கோப்பாவெளி - மட்டு)

1989ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பாரூக்** (நாகூர்த்தம்பி பாயிஸ் ஆதாம்லெப்பை - அக்கரைப்பற்று 01 - அம்பாறை)

திருமலை - தென்னமரவடி, சிறிபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பிரகாஷ்** (கணபதிப்பிள்ளை கமலநாதன்-திருமலை)

1990ஆம் ஆண்டு திருமலை - நிலாவெளிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**சிறி** (—புல்மோட்டை - திருமலை)

திருமலை - உப்புவெளி, 3ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வேங்கை** (ஆறுமுகம் மயில்வாகனம்-அம்பாள்குளம் - கிளிநொச்சி)

**டானியல்** (கனிபா முகம்மதுராசிக் - திருமலை)

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாதன்** (சின்னத்தம்பி ரவீந்திரன் - கிராஞ்சி - பூநகரி)

மன்னார் - தலைமன்னார் பகுதியில் 15-06-90 அன்று நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**சசிதரன்** (குபேந்திரன் அல்போன்ஸ் - குஞ்சுக்குளம் - மன்னார்)

அம்பாறை - காரைதீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 35 தமிழர்கள் மற்றும் இதேபகுதியில் வெட்டிக் கொல்லப்பட்டு கிணற்றில் போடப்பட்ட 4 தமிழர்கள்.

மட்டு - நிந்தவூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 23 தமிழர்கள்.

சம்மாந்துறைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 30 தமிழர்கள்

கறுவாக்கேணிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

மட்டு - வாழைச்சேனை அகதிமுகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் உட்பட 71 தமிழர்கள்

சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வாழைச்சேனை - கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன்

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பெரியநீலாவணை 01ஐச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

*C. M.* **சுகந்தினி**
புதி. 309--157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(8596)

ஈடுபட்டவர்களின் கறைபடிந்த வரலாறுகளையும், போரினால் ஏற்பட்ட பேரழிவுகளையும் நன்கு அறிந்து இருப்பீர்கள்.

கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள். மனிதாபிமான ரீதியில் போரை நிறுத்துங்கள்.

இந்த அர்த்தமற்ற போரினால் பெருமளவு அனர்த்தங்

நிர்க்கதியாகியுள்ளது இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

மேற்படி குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தலைவர் அரச சேவையிலிருந்து இளைப்பாறிய போதும் பொதுநலத்தை கருத்திற்கொண்டு இன்றைய போர்க்கால சூழ்நிலையில் கூட்டுறவுத்துறையில் தன்னைஇணைத்து மக்களுக்கு அளப்பரிய

ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ள இவர்கள் பின்னர் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவையும் சந்தித்து உயர்கல்வி அமைச்சர் அநுரா தெரிவித்தார் எனினும் இவர்களது பெயர் விபரங்களை அவர் வெளியிடவில்லை.

---

நல்லூர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

## வருடாந்த அலங்கார உற்சவம்

**22 - 06 - 94 -- 01 - 07 - 94**

உற்சவ காலத்தில் தினமும் இரவு கலைநிகழ்ச்சிகளும், 8.30 மணி முதல் தெய்வீகப் பேருரையும் இடம்பெறும்.

நிகழ்த்துபவர்:

# [illegible] - திரு. த. சிவகுமாரன்

அவர்கள்

(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)

ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி

விடயம்:

# தேவி மகாத்மியம்

சிறப்புற வாழ்த்துபவர்கள்:

ஜெயா சைக்கிள் சென்ரர், தர்சினி ஸ்ரோர்ஸ், கீதா வீடியோ சென்ரர், பரஞ்சோதி மருந்தகம், விஜே சிற்றுண்டி நிலையம், ராஜா மோட்டோர்ஸ், காவேரி சீயாக்காய்ப்பவுடர் தயாரிப்பாளர், முதலி ஸ்ரோர்ஸ், சுகந்தினி மதுபானசாலை, முல்லை அச்சகம், ஓவியர் யசோ (சித்திர பாட நூலாசிரியர்), திரு. பிறேம்.

(8622)

---

# இ.தொ. காவின் வெற்றியை சேவையால் அளவிடுங்கள்

**- தொண்டமான்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இலாபத்தை நோக்காகக் கொண்ட அமைப்பல்ல மாறாக அது சேவையை நோக்காகக் கொண்டது இதன் வெற்றிகளை இலாபத்தைக் கொண்டு கணக்கிட முடியாது இவ்வமைப்பு மக்களுக்கு ஆற்றியுள்ள சேவையைக் கொண்டே கணக்கிட முடியும் என்று இலங்கை தொ.கா. தலைவரும் சுற்றுலா கிராமிய தொழில் துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறினார்

கடந்த சனிக்கிழமை அவரது அமைச்சில் இ.தொ.கா. நிர்வாக உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய அவர் ஆசியாவிலேயே பெரிய தொழிற்சங்கமான இ.தொ.கா. அதன் சிறந்த சேவையினாலேயே இவ்வளவு காலம் நிலைத்து நிற்கிறது. இன்று பல சிறு தொழிற்சங்கங்கள் தோன்றியுள்ளன- நீங்கள் சிறந்த சேவையாற்றினால் இவை தோன்றியிருக்கா. எமது உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். அத்துடன் தொழிலாளர்கள் நம்மில் தன்னம்பிக்கை கொள்ளச் செய்வது உங்களது கடமையாகும்.

பிரச்சினை ஆரம்பித்தவுடன் அனைவரும் இ. தொ. கா. அழிந்துவிட்டது என நினைத்தனர். கேலிச் சித்திரங்களுக்குக் குறைவிருக்கவில்லை. ஆனால் இ.தொ. கா. இன்றும் நிலைக்கிறது. பிரச்சினைகளை உருவாக்கியவர்களை இன்று எங்குமே காணவில்லை என்றார்.

---

# முக்கிய அறிவித்தல்

**தனியார் கல்வி நிறுவன**
**ஒன்றியம் - யாழ். மாவட்டம்**

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

**இடம்: புதிய விஞ்ஞான கல்விக் கழகம்**
(எழிலகம் முன்பாக)

**காலம்: 24-06-94 (வெள்ளி) பி.ப. 3.30 மணி**

★ மாற்றியமைக்கப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள் அறிவிக்கப்படவுள்ளன.

★ அனைவரது வரவும் மிக் முக்கியமானதாகும்.

**பொதுச் செயலாளர்**
யாழ்- மாவட்டம்

(சி-9857)

---

சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

திருமலை - மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்

பலாலிமுகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குட்டியபுலத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்

பலாலி வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழிளைஞன்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9852)

---

# 3 ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி தர்சனா (றதி) குமாரசாமி

(ஆசிரியை தர்மக்கேணி அ. த. க பாடசாலை)

| தோற்றம்: | திதி: | மறைவு: |
|---|---|---|
| 19-9-1967 | 22-06-1994 | 25-6-1991 |

கண் காணா தூரம் சென்றீர்
கரை காணா கலம் ஆனோம்
எண்ணி எண்ணி ஏங்கும் எம் இதயங்கள்
எத்தனை சொன்னாலும் ஆறவே ஆறாதம்மா
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறவே ஆறாது நம் கண்ணீர்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரிய பளை,
பளை

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

(8621)

# அதிகாரபரவல்இன்மையால் குழப்பநிலை தோன்றுகிறது

**- கலாநிதி பியற்றே பார்ல்ரோடஸ்**

(யாழ்ப்பாணம்)

பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் சகல மக்களும் ஆட்சியில் பங்கேற்கக் கூடிய முழுமையாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட அமைப்புக்கள் உருவாக்கப்படாமையினாலேயே அரசியல் உறுதிப்பாடில்லாத குழப்பநிலை காணப்படுகிறது. இவ்வாறு பிரட்ரிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி செல்வி பியற்றே பார்ல்ரோடஸ் தெரிவித்தார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், பிரட்ரிக் ஈபேர்ட் மன்றம், எடியுக்கேசன், இன்ரநாஷனல் ஆகிய அமைப்புக்கள் இணைந்து 'கல்வி நிர்வாகமும், அதிகாரப் பரவலாக்கமும்' என்னும் பொருளில் நடத்திய கருத்தரங்கின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், சகல இனமக்களும், ஆட்சியில் பங்களிக்கக் கூடியதான சமஷ்டி அமைப்புக்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை ஏற்படுவதற்கான ஊக்குவித்தலை பிரட்ரிக் ஈபேர்ட் மன்றம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பா, ஜெர்மனி போன்ற நாடுகளில் அண்மையில் ஏறபட்டுள்ள அரசியல் அமைப்பு மாற்றங்களை இலங்கை மக்கள் அவதானிப்பது சிறந்தது எனவும் குறிப்பிட்டார்.

**ஸ்டேர்லிங் பவுண் கரன்சிகள்**

# யாழ். தபால்அலுவலகத்தில் மாற்றிக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பிரிட்டனின் ஸ்டேர்லிங் பவுண்கரன்சிகளை இலங்கை ரூபாவுக்கு மாற்றிக் கொள்ள முடியுமென்று யாழ்ப்பாண அஞ்சலக அதிபர் கோடீஸ்வரன் கூறியுள்ளார்,

திருகோணமலை அஞ்சல் அலுவலகத்திலிருந்து தினமும் நாணய மாற்று வீதம் தொடர்பான விபரம் கிடைத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இந்த நாணய மாற்று விபரங்கள் தமக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதலிடம்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி போட்டி நிகழ்வின் போது தேசியக் கொடியினை சங்கானைக் கோட்ட மாணவர் அமைப்பு மகளிர்பொறுப்பாளர் செல்வி வலம்புரி ஏற்றி வைத்தார். கோட்டக் கொடியினை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற முன்னைநாள் உடற்கல்விப் பணிப்பாளர் க. நாகமணி அவர்கள் ஏற்றி வைத்தார். பங்குபற்றிய கல்லூரிகளுக்கான கொடிகளை விளையாட்டு அணித்தலைவர்கள் ஏற்றி வைத்தனர் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் பிரதமவிருந்தினர் வழங்கிக் கௌரவித்தார்.

மேலும் இப்போட்டிகளில் கோட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய பாடசாலை அணிகள்

## போசாக்கு வார நிறைவு விழா

(தொல்புரம்)

சங்கானை வலி மேற்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்டு வந்த போசாக்கு வார நிறைவு நாள் விழா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் பிரதேச செயலர் கா. சந்திரராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் கலாநிதி என் விவேகானந்தன் பிரதம விருந்தினராகவும், திருமதி சரோஜா சிவச்சந்திரன், கோட்டக்கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், சங்கானை வட்ட அரசியல் துறைப்

# ஆளும் கட்சி ஆதரவாளராகவே சட்டமா அதிபரின் பணியுள்ளது

**- றிச்சாட் பத்திரான**

(கொழும்பு)

சட்டமா அதிபர் ஆளும் கட்சியின் ஆதரவாளராகவே செயற்படுகிறார். அவர் நீதித்துறைக்கு உரிய வழிகாட்டலை வழங்கவில்லை. இவ்வாறு சுதந்திரக்கட்சி பா. உவும், எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான றிச்சாட் பத்திரான பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை குறைத்து உயர் நீதி மன்றத்திற்கு அவற்றை வழங்குவது தொடர்பாக ஐ. தே. க உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீது உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். நீதித்துறை செழிப்படைய வேண்டும். இந்த சட்டமா அதிபருக்கு வெட்கம் இருப்பின் அவர் பதவி துறக்க முன் வரவேண்டும். நிகழ்கால சட்டமா அதிபர் ஆளும் கட்சியின் ஆதரவாளராகவே செயற்படுகிறார் என்றும் தெரிவித்தார்.

## சென் றோக்ஸ் முதலிடம் பெற்றது

(குருநகர்)

கல்வித்திணைக்களமும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய மாவட்டத்திலான தமிழ் மொழி கலைத்திறன் போட்டி பிரிவு 2 சிறுவர் நாடகத்தில் யாழ் - புனித றோக்ஸ் றோ. க. வித்தியாலயம் முதலாமிடதைதப் பெற்றுள்ளது.

இம்முறை இவர்கள் மேடையேற்றிய ''ஒற்றுமையே பலம்'' என்னும் நாடகமே முகலாமிடத்தை பெற்றுள்ளது. கடந்த வருடமும் மேற்படி வித்தியாலயத்தின் ''கல்வியில் ஏழைகள்'' என்னும் நாடகம் 1-ஆம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணைக் கோட்ட பாடசாலைகளில் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு இன்று புதன்கிழமை யாழ்|நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் 8-30 — 4-30 வரை கருத்தரங்கு நடைபெறும்.

## நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் திருத்த வேலைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் 93 - 94ஆம் ஆண்டு நிதியில் யாழ். பிரதேச சபைச் செயலாளரால் 50 000ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி பரிமளம் அன்னலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிபர் கூறியுள்ளார். (24)

## ஆலோசனைக் கூட்டம்

இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்கம் யாழ். கிளையைப் புனரமைப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை காலை

# விவசாய இரசாயனபொருள் விலை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

விவசாய இரசாயனப் பொருட்களின் விலைகள் விரைவில் குறைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக அரசாங்கம் களை கொல்லி மருந்து, உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவற்றின் உற்பத்தியிலும் இறக்குமதியிலும் ஈடுபட்டுள்ள தனியார் ஸ்தாபனங்களின் ஆலோசனையைப் பெறுவதற்காக கொள்கை திட்டமிடல் அமைச்சு விரைவில் மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை விவசாய பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் கருவிகளின் இறக்குமதி விலையைக் குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## சாரணர் கூட்டம்

உயர் சாரணப் பயிற்சி தொடர்பான விசேட கூட்டமொன்று இன்று பிற்பகல் 4 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி திரி சாரணர்கள், சாரண ஆசிரியர்கள், குழச் சாரண தலைவர்கள், குருளைச் சாரண ஆசிரியர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

**ஐ.ஐ.தே.முன்னணி**

# தேசிய சபைக் கூட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஐ ஐ தே. மு. யின் லலித் பிரிவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றைத்தொடர்ந்து நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து இருந்தது தெரிந்ததே. நீதிமன்றத்தின் இந்த உத்தரவின் மூலம் ஐ. ஐ தே மு.வும், ஐ, தே. கவும் உத்தியோகபூர்வமாக இணைந்து கொள்ளும் திட்டம் பல மாதங்களுக்கு பின் தள்ளப்படும் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இதேவேளை மேல்மாகாண ...ரட்ண எதிரிவீரவிற்கு வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது,

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தொல்புரம் செல்வா சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமாகிய மேற்படி விளையாட்டுப் போட்டியை பாலர் பாடசாலையின் ஆசிரியைகள் செல்விஅ புஸ்பராணி, செல்வி கு. அருஞ்சோதி உட்பட மற்

# உதைபந்தாட்ட ரசிகர் 18பேர் வரையில் பலி

(வட அயர்லாந்து)

வட அயர்லாந்தில் லொபனியன் நகரில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் இனம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உதைபந்தாட்டத்தைப் பார்வையிட வந்த ஆறு உலக கிண்ண உதைபந்தாட்டரசிகர்கள் பலியாகியுள்ளனர்.

இத்தாலிக்கும் அயர்லாந்துக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

உலக கிண்ண உதைபந்தாட்டத்தை பார்வையிடுவதற்கு வந்த உதைபந்தாட்ட ரசிகர்கள் பயணம் செய்த விமானம் விபத்துக்கு உள்ளானதை தொடர்ந்து பன்னிரெண்டு பேர் மரணம் அடைந்துள்ளனர்

லியன் இன ஜெட் விமானமொன்றை வாடகைக்கு அமர்த்தி செல்ல முற்படுகையில் டுபாஸ் சர்வதேசவிமான நிலையத்தில் ஏற்பட்ட விபத்திலேயே இவர்கள் பலியானார்கள்.

## இலக்கிய உரையரங்கு

அறவழி இலக்கியப்பேரவை நடத்தும் இலக்கிய உரையரங்கு நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிறன்று மாலை 3.30 மணியளவில் அறவழி பயிலகத்தில் நடைபெறவுள்ளது. இவ் அரங்கில் ''போராட்ட இலக்கியம்'' என்னும் பொருளில் கே. ஆர். டேவிட் உரை நிகழ்த்தவுள்ளார்.


# ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | ஆண்டவன் அழைப்பில்: |
|---|---|
| 01 | 22 |
| — | — |
| 09 | 06 |
| — | — |
| 1946 | 1993 |

## ஜேம்ஸ் ஜெகநாதன் அந்தோனிப்பிள்ளை
(முத்துராசா)

அன்பு பொழிந்து, அமுத மொழி பேசி ஆசைக் கரம் நீட்டி எங்களை எல்லாம் ஆளாக்கிய அருமை அப்பாவே, பிரிவு இயற்கையானாலும் எங்கள் நெஞ்சப் பிசைவு இரத்தமாயக் கசிகிறது. எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் இப்பொழுது எங்களையே சுற்றி நிற்பீர்கள். தூலதேகம் மறைந்தாலும் சூக்தம உடலோடு எங்களைக் கவனிக்கும் உங்களைப் பார்க்கும் பாக்கியம் இல்லாது ஏங்குகிறோம். காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்தாலும் எம் இதயங்களில் நிலையாக நிற்கும் உங்கள் நினைவு மாறாது.

இவரின் ஆத்ம சாந்திக்காக 22-06-1994 இன்று மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும்,

அன்புத் தாய். மனைவி, பிள்ளைகள், மருமகன், உற்றார்.

கோட்ட மட்டத்தில் வெற்றி யீட்டிய பாடசாலை அணிகள் விபரம் வருமாறு: 17 வயதின்கீழ் பெண்கள் அணிகளில் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி முதலாம் இடத்தையும், வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை 2ஆம் இடத்தையும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. 19 வயதின் கீழ் பெண்கள் அணிகளில் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி 1ஆம் இடத்தையும், வட்டு. இந்துக்கல்லூரி 2ஆம் இடத்தையும, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி 3ஆம் இடத்தையும்பெற்றுக் கொண்டன. (41)

ப. விக்கினேஸ்வரன், சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ந. மதி உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்புரைகளும், கருத்துரைகளும் வழங்கவுள் ளனர்.

மேலும் போசாக்கு வாரத்தினையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் நிகழ்ச்சிகள் இவ் விழவில் சிறப்பு நிகழ்வாக நடைபெறவுள்ளது. அத்தோடு இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும் அங்கு இடம் பெறவுள்ளது. (41)

## நாகர்கோவில் பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(வடமராட்சி)

ஐந்து கிறாம் கஞ்சாவை மறைத்து வைத்திருநத நபர் ஒருவருக்கு எதிராக நாகர் கோயில் காவல் துறையினர் பருத்தித்துறை தமிழீழ நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

நாகர் கோயிலைச் சேர்ந்த ச. சுப்பிரமணியம் என்பவருக்கு எதிராகவே காவல் துறையினர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

நீதியாளர் பிரதீபா இக் குற்றத்திற்காக 4 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் 15 நாள் சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்புக் கூறினார். (யோ)

## நினைவுக்கல் நடப்பட்டது

திருகோணமலை குச்சவெளிக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் கடந்த பத்தாம் திகதியன்று எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் சுமந்திரன் (சந்திரன் தயாபரன் திருமலை) நினைவாக நடுகல் ஒன்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகை செய்யப்பட்டது.

## சந்தேசிய சேவையின் முக்கியஸ்தர் மரணம்

லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையானசந்தேசிய வானொலிசேவையில் முக்கிய பங்கினை வகித்த சனத் வலகெதர திடீர் சுகவீனத்தினால் மரணம் அடைந்துள்ளார்.

## அறிவியலரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் கீழுள்ள சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா நாள் அறிவியற் கருத்தரங்கு இன்று பிற்பகலில் சுன்னாகம் பெரியமதவடி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் 'சிறுவர் பராமரிப்பும் போஷாக்கும்' என்னும் பொருள்பற்றி உரையாற்றவுள்ளார்.

கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ் மணிக்கூட்டு வீதியிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறும் என யாழ். கிளையின் செயலாளர் திரு. செ. ப. ஜீவானந்தம் தெரிவித்துள்ளார். (24)

## நூலக வார நிறைவும் புத்தக கண்காட்சியும்

சாவகச்சேரி பிரதேச சபையின் நூலக அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் நூலக வார நிறைவு நாள்விழாவும், புத்தக கண்காட்சியும் இன்று பிற்பகல் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச விசேட அணையாளர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்கிறார் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இன்பன், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலர் கு. ந. பாலச்சந்திரன், சாவகச்சேரி பிரதேசசபை செயலர் ஐ. வைரமுத்து ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தமிழ்த்தின விழாவும் நினைவு விழாவும்

பூம்புகார் நித்தியா கல்விக் கூடத்தின் நித்தியா நினைவு தினமும், தமிழ்த் தின விழாவும், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெறவுள்ளது. அதிபர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. தானையா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் க. சொக்கலிங்கம், மு.வே.யோ. வாஞ்சிநாதன், செல்வி மிதுளா, செல்வி மாதவி தமிழன், செல்வி சுகி, பூவேந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை மேல்மாகாண சபையில் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிரேமரட்ண குணசேகர வகித்த சுகாதார அமைச்சுப் பதவி லலித் விசுவாசியான பிரேம

கு. அருஞ்சோதி உட்பட மற்றும் பலர் நெறிப்படுத்தி வைத்தனர். சிறந்த முறையில் விளையாடிய பாலர்களின் விளையாட்டு நிகழ்வை அநேக மக்கள் கண்டுகளித்தனர். (41)

## பாலர் பாடசாலை வளர நிதி ஒதுக்க முயற்சிப்பேன்

(வடமராட்சி)

எனது பிரிவு மேலதிக அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் இந்தப் பாலர் பாடசாலை வளர்ச்சிக்கு பணம் வழங்க என்னால் முடிந்தவரை ஆவன செய்வேன்.

இவ்வாறு புலோலி மேற்கு கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. க. தங்கராசா தலைமையில் நடைபெற்ற பாலர்பாடசாலை மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புலோலி மத்தி கிராம அலுவலர் திரு. கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது, இந்தப் பாடசாலை சிறப்பாக நடைபெற்று வருகிறது பாலர் பாடசாலை ஆசிரியைகளும் தமது சேவையை சிறப்பாக செய்கின்றனர். நேரம் கருதாமல் தமது கடமையை செவ்வனவேசெய்து வருகின்றனர்.

விளையாட்டு என்பது மாணவ சமுதாயத்திற்கு இன்றியமையாதது. பாலர்களுக்கு விளைய ட்டு முக்கியமானது. கல்வியோடு விளையாட்டும் இணைந்து கொண்டால் எதிர்கால சமுதாயம் நல்ல விடிவைக்காணும். இப் பிரிவில் நான் சில பாலர்பாடசாலைகளை பார்வையிட்டிருக்கின்றேன். இந்தப் பாடசாலை நல்ல முறையில் செயற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (யோ)

## செஞ்சிலுவைச்சங்க கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவு சங்கத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு சுண்டுக்குளி சந்தியில் உள்ள பணிமனையில் பிரிவுத்தலைவர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெறும். (24)

## கலைவிழா

வடமராட்சி கிழக்கு மாமுனை அ. த. க. பாடசாலையில் எதிர்வரும்28 ஆம் திகதி அதிபர் திரு. த. திரவியராசா தலைமையில் கலைவிழா நடைபெறவுள்ளது. இக் கலை விழாவின் பிரதம விருந்தினராக கோட்டக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வ. செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (யோ)

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம். நல்லூர், வேலணைக் கோட்ட பாடசாலைகளில் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8-30 மணி முதல் நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளதாக மனையியல்உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஆர். சண்முகரத்தினம் தெரிவித்துள்ளார். (24)

அன்புத் தாய். மனைவி, பிள்ளைகள்,
மருமகன், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

மணற்காடு,
குடத்தனை.

(சி-9853)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
06. 08. 1935

விண்ணில்
23. 05. 1994

அன்னை

### திருமதி அன்னம்மா செல்லப்பா

இருண்டது மனங்கள் எல்லாம் - அம்மா
நனைந்தது மேனி எல்லாம் கண்ணீராலே
பால் நினைந்து ஊட்டும் தாயே
பாவியர் எம்மை விட்டு எங்கு சென்றாயோ
ஊரே உருகுகின்றதம்மா உனை நினைந்து
ஆறுதற் கிணல் தந்த ஆலமரம் சாய்ந்ததே என்று
காலனவன் காலமின்றி உனை கவர்ந்து சென்றானோ
வேரிழந்த விருட்சமென நாம் கலங்கி நிற்க
பாருலகை காணவைத்த அன்னையே - நீ
மஞ்சவண்ணன் திருவடியை சென்றடையவேண்டு கின்றோமே

அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் இன்று (22. 6. 1994) புதன்கிழமையன்று நடைபெறும். இன்றைய தினம் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம். அத்துடன் எங்கள் அன்னை நோய் வசப்பட்டிருந்த காலத்தில் அவருக்கு வேண்டிய உதவி ஒத்தாசை நல்கிய அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்,
ஏரந்தனை.

மகன்
செ. நகுலேஸ்வரன்.
(8613)

# கிராம உத்தியோகத்தர் தெரிவு பெயர் விபரம் வெளியாகியது

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள் நியமனம் பெற இருப்பவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர் விபரம் வருமாறு:

**நெடுந்தீவு**

திரு. பி. தருமபூபதி

**வேலணை**

திரு. ஆர். யோகேஸ்வரன் திரு. வி. நித்தியானந்தன், திரு. ஜே. பிரசிலா, திரு. எஸ். இரத்தினனேஸ்வரன், திரு ஜே. நாகராசா, திருமதி பி. இராஜேஸ்வரி, திரு. என். தனபாலசிங்கம்.

**ஊர்காவற்றுறை**

செல்வி அகிலா அமரசிங்கமணி, திரு. ஜே. பதிநாதன், செல்வி மதிவதனி கனகரட்ணம், திரு. ஆர். திருபுகழூர்சிங்கம், திரு. பி. பாலச்சந்திரன், திரு. ஜே. அன்ரன் ஜெயக்குமார், திரு. ஏ. சுந்தரராசா, திரு. ஆர். சிறிஸ்கந்தராசா. திரு, ஆர். ரமேஷ்

**யாழ்ப்பாணம்**

திரு. ஏ. விமலேந்திரகுமார், திரு. எஸ். யூலன், திரு. சி. ஜே. சுரேந்திரா, திரு. எஸ். ஞானசேகரம், திரு. என். லிங்கேஸ்வரன், திரு. கே. விஜயரட்ணம்.

**நல்லூர்**

திரு. கே. நித்தியானந்தன் திரு. ஆர். ஜேசுதாசன், திரு. எஸ். சிவமோகன், திரு. எம். ராகுலன், திரு. எஸ். ஜெயக்குமார்.

**சாவகச்சேரி**

திரு. ஜி. சிறிதரன், திரு. கே. சுபாஸ் சந்திரபோஸ், திரு. கே. நாகேஸ்வரன், திரு கே. உபேந்திரன் திரு. ஆர். பரமானந்தன், திரு, என். தனபாலசிங்கம்.

**சண்டிலிப்பாய்**

திரு. எஸ். சி. உலகநாதன் திரு. கே. சுதர்சன், செல்வி எஸ். செல்வராசா, திரு எஸ் ஏ. ஞானானந்தன், திரு. எஸ் சிறிஸ்கந்தராசா, திரு. வி. கேதனபால, திரு. பி. நிருபன், திரு. எல். அருள்ராஜ்.

**சங்கானை**

திரு. வி. குகனேசன், திரு. கே. கணேசலிங்கம், திரு. எஸ் ஜீவராஜா, திருமதி பி. லலிதாம்பாள்.

**உடுவில்**

திரு. ஆர். ஜெயக்குமார், திரு. எஸ். லம்போதரன், திரு என். சிறிமான், திரு. ஜி. நாகேந்திரராசா, திரு. வி. ஜெயகரன், திரு. வி. வசீகரன், திரு பி. சுதாகரன், திரு. ஈ. வி. பிரபாகரன், திரு. எஸ். சிவானந்தன், திரு. வி. பாலபத்மன், திரு. என். ஸ்ரீ. சோமஸ்கந்தமூர்த்தி, திரு, எஸ். பாலசுப்பிரமணியம்.

**தெல்லிப்பளை**

திரு. ஆர் இந்திரஜித், திரு பி. தயாநிதி, திரு. பி. ஜெயகரன், திரு. வி. சுரேஷ், திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராசா, திரு. எஸ். செல்வேந்திரன், திரு. எஸ். சூரியகுமார், திரு. என். நாகபாதம், திரு. கே. செல்வன்குமார், திரு. என். ரவீந்திரன், திரு, ஈ. கங்காதரன். திரு. என். தவயோகராசா, திரு. எஸ். அல்பிரட், திரு. எஸ். பூபாலசிங்கம்.

**கோப்பாய்**

திரு. ரி. சிற்சபேசன், திரு. ஐ. சிவானந்தம், திரு. என். பஞ்சலோகரஞ்சன், திரு. எஸ். உதயகுமார், திரு. எஸ். ரி. வரதராசன், திருமதி ஜி. குணேஸ்வரி, திரு எஸ். முருகவேல், திரு. எஸ். வித்தியாபதி, செல்வி என். கிருஷ்ணகலாநிதி, திரு. எஸ். எழிலரசன்,

**கரவெட்டி**

திரு. ரி. நித்தியானந்தன், திரு. கே. ரவிக்குமார், திரு. எம். சிவனேசன், திரு. பி. குமரேசன், திரு. ரி. வதனரூபன், திரு. பி ஐயாத்துரை, திரு. ஏ. விமலேந்திரன் திரு. ஜே. ஜீபாகரன்,

**பருத்தித்துறை**

திரு. ஆர். யோகச்சந்திரன, திரு. எஸ். டி. தேவகுமார், திரு. எஸ். தவனேஸ்வரன், திரு. என் சேகர், திரு. எஸ். ரவீந்திரன். திரு. வி. பிரேமச்சந்திரன்

**வடமராட்சி கிழக்கு**

திரு. எம். பி. தவராசா. திரு. எஸ். சிவலிங்கம், திரு, எஸ். தோமஸ்யூட்.

## போட்டி ஏற்பாடு

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிற்கான பேச்சு, கட்டுரைப்போட்டிகளை யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை நடாத்தவுள்ளது.

ஆரம்ப பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என ஐந்து பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள மேற்படி போட்டிகளில் ஒரு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பேருக்கு மேற்படாமல் பங்கு பற்ற முடியும் அத்தோடு வினாடி வினா போட்டிகளும் குறிப்பிட்ட சில பிரிவிற்கு நடத்தப்படவுள்ளது. அதில் மேற்பிரிவும், அதிமேற்பிரிவும் பங்கு பற்ற முடியும் மேலதிக விபரங்களுக்கு அவ்வப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அல்லது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என கூட்டுறவுச் சபையினர் தெரிவித்துள்ளனர்

(41)

# யுத்தத்தினால் ஆசிரியர்கள் பெருமளவில் பாதிப்பு

### -கல்விச் சேவை அமைப்பின் தலைவர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் இடம் பெயர்ந்து அகதிகள் முகாம்களில் இருப்பதாக கல்விச் சேவைகள் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அகதிகள் முகாமில் வாழும் ஆசிரியர் மிகவும் மோசமான நிலையில் வாழ்கின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் மற்றும் அடிப்படை வசதிகளான தண்ணீர், மின்சாரம், மலசலகூட மற்றும் போக்குவரத்து தொலை தொடர்பு தபால் தொடர்புகள் கூட இல்லாத நிலை காணப்படுகிறது இவ்வாறு இவ் அமைப்பின் தலைவர் பிரேமசார அமரதுங்கா மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான நிலையில் வாழும் ஆசிரியர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்படுவதில்லை என்றும், இதனால் இவர்கள் சம்பளத்தை விட கடன்களை நம்பி சீவிக்க வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தினால் வடக்கு-கிழக்கை சேர்ந்த ஆயிரத்தி அறுநூற்றி தொண்ணூறு பாடசாலைகள் சேதமடைந்திருப்பதாகவும் ஒன்பதுஆயிரத்து இருநூற்றி எழுபத்தி ஆறு ஆசிரியர் அகதிகளாக்கப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## முழுநிலாநாள் கருத்தரங்கு

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாநாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணியளவில் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் ''19 ம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்'' என்னும் பொருளில் சிரேட்ட விரிவுரையாளர் சி. சிவலிங்கராசாவும், 'வெளிநாட்டு உதவியும் அரசியல் பொருளாதார பரிமாணமும்' என்னும் பொருளில் சிரேட்ட விரிவுரையாளர் ஆர். நந்தகுமாரும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## மலையகமக்கள் முன்னணி முடிவு

# உலக கிண்ண கால்பந்து மேலும் சில முடிவுகள்

உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்ட போட்டித் தொடரில் கடந்த ஞாயிறு ஓர்லண்டோவில் நடைபெற்ற ஆட்டத்தில் பெல்ஜியம் அணிமொறோக்கோ அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. வாஷிங்டனில் நடைபெற்ற போட்டியில் கமரூன் அணி சுவீடன் அணியை எதிர்த்து ஆடியது ஒவ்வொரு அணியும் தலா இரு கோல்கள போட்டு ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.

அமெரிக்காவில் நடைபெறும் உலக கோப்பைக்கான கால் பந்து போட்டியில், பிறே

## உலர் உணவு விநியோகம்

(தொல்புரம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கான 1994 வைகாசி மாத முதல் இருவாரங்களுக்குரிய

# அமைச்சரவைப் பதவியில் காமினிக்கு அதிருப்தி

நிதி அமைச்சும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும் தமக்கு வழங்கப்படும் என்று காமினி திசாநாயக்கா தமது நண்பர்களுக்கு மிகுந்த நம்பிக்கையுடன் தெரிவித்திருந்தார், இவ்வாறு ஐலண்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் பிரபாத் சகபந்து சண்டே ஐலண்ட் பத்திரிகையில் எழுதியுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு அமைச்சுக்களும் தேசிய ரீதியில் அமைச்சரின் முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடியவையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காமினி ஜயவிக்கிரம பெரேராவிற்கு அமைச்சர் பதவி எதுவும் கிடைக்காமைக்கு ஐ. ஐ. தே. மு. - ஐ. தே. க. இணைப்பில் காணப்படும் தாமதமே காரணம் எனக் கூறப்படுகிறது.

வடமேல் மாகாணசபையில் முதல்வர் ஜீ. எம் பிரேமச்சந்திராவின் அமைச்சரவைக்கு ஐ. தே. க. உறுப்பினர்கள் ஆதரவு தருவது நீடிப்பதற்கு உத்தரவாதமளிக்கும் முகமாகவே காமினி ஜயவிக்கிரம பெரேரா பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.


கலா அழகுக் களஞ்சியம் அழைக்கிறது

ஆச்சரியப்படாதீர்கள்!
உங்கள் மனம் கவர்ந்த அழகு மாளிகை
பெஷன் ஹவுஸ்

★ கலா அழகுக் களஞ்சியம் ★

ஆக மாற்றமடைந்துள்ளது.
பெயரில் மாற்றம்! தரத்தில் ஏற்றம்!! விலையில் நிதானம்!!
மீண்டும் நினைவூட்டுகிறோம்.

கலா அழகுக் களஞ்சியம்
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9854)



யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

பதவி வெற்றிடம்

பதவி :- கணக்காளர் 165/ 84 -10
வேதனம் :- 1005/ 40×5 - 50×10-1705/-
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள்:-

அ. கூ. ச. ஊ; 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப்பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச ஊ. 12ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது.

ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி

கணக்கில் தோற்கடித்தது. வாஷிங்டனில் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் நோர்வே மெக்சிக்கோவை ஒரு கோல் போட்டு தோற்கடித்தது. லொஸ் ஏன்ஜல்ஸில் கடந்த ஞாயிறு நடைபெற்றும் உலக கோப்பைக்கான கால்பந்து போட்டியில், பிறேசில் அணி ரஷ்ய அணியை 2-0 கோல் கணக்கில் தோற்கடித்துள்ளது. நேற்று முன்தினம் கலிபோர்னியாவில் இப் பந்தயம் நடைபெற்றது.

...க்கான 1994 வைகாசி மாத முதல் இருவாரங்களுக்குரிய இலவச உலர் உணவு விநியோகிக்கப்பட்டு வருகிறது-

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகள் மூலம் இலவசஉலர் உணவாக அரிசி, சீனி, பருப்பு, பயறு நற்சீரகம், சோம்பு, உள்ளிப்பூடு, நூடில்ஸ், மீன்ரின் லக்ஸ்பிறே போன்றவற்றை விநியோகித்து வருகின்றது- (41)

## ...முன்னணி முடிவு

(கொழும்பு)

தோட்டதொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடைபெறுவது தொடர்பாக ஐ.தே-க மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

## பிரேமா நினைவுரை ஜே.ஆர். நிகழ்த்துகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்கபிரேமதாசாவின் 70.ஆவது பிறந்த நாளான நாளை ஜூன் 23 அன்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நினைவுரையாற்றவுள்ளார். இவ்வைபவத்தில் ஜனாதிபதி டி,பி,விஜேதுங்கா பிரதமவிருந்தினராகவும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா, வீடமைப்புஅமைச்சர் பி, சிறிசேன குரே ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர், இந்நிகழ்ச்சி சௌசிரிபாயா மண்டபத்தில் நாளை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது,

இந்நிகழ்ச்சியில் பிரேமதாசாவின் சித்தாந்தம்: பிரேமதாசாவின் சிந்தனைகளின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட தொகுதி வெளியிடப்படவுள்ளது, இந்நூலுக்கான முன்னுரையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எழுதியுள்ளார், அண்மையில் அமைக்கப்பட்ட பிரேமதாசா நினைவு மையம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது,

அத்துடன் பிரேமதாசா ஞாபகார்த்தமாக அரச வயோதிபர் இல்லத்தில் புதிய மண்டபம் ஒன்றும் கட்டப்படவுள்ளது, இதற்கான அத்திவாரக்கல்லும் அன்று நடப்படவுள்ளது, மேலும் கெத்தராம விளையாட்டரங்கமும் பிரேமதாசா நினைவாக மறுபெயர் சூடவுள்ளது,


## தென்னைச் செய்கை வழிகாட்டி

தென்னைச் செய்கை வழிகாட்டி என்ற ஒரு கைநூலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. வதிவிட வேளாண்மையாகவோ பெரிய அளவிலோ தென்னைச் செய்கையில் ஈடுபட உள்ளவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும். விருப்பமுள்ள, உண்மையான விவசாயிகள் எம்மிடம் தொடர்பு கொண்டு கைநூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ பிரதிகள் இலவசம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி 9848)



ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம்1 அல்லது இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரி கணக்கியல் டிப்புளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் / உள்ளகக்கணக்குப் பரிசோதனைப்பதவிஒன்றில் நாலு வருடங்களுக்குக்குறையாத அனுபவம்

**வயது எல்லை:-** வயது 23க்கும் 40க்கும்உட்பட்டதாக இருக்க வேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

**வசிப்பிடத்தகைமை:-** குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ் மாவட்டத்தில் வசிபவராக இருக்க வேண்டும்.

**பிணைப்பணம்:-** கூ. வே ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்

**உள்ளடக்கப்பட வேண்டியவை:-** கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்

**விண்ணப்பப் பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதி: 05 - 07 - 94**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்

தலைவர்
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
(சி-9846) கோப்பாய்.


## ஜனாதிபதி தேர்தல் பற்றி தேர்தல் அலுவலகம் ஏற்பாடு

(கொழும்பு)

இவ்வாண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தமது அரசியல் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு தொலைக்காட்சி, வானொலிகளைப் பயன் படுத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் தேர்தல் ஆணையாளர் சந்தித்து பேச்சுக்களை நடத்த திட்டமிட்டுள்ளார் என மேலும் தெரியவந்துள்ளது.

இதேவேளை அடுத்த வருடம் பொதுத்தேர்தல் நடைபெற இருப்பதாகவும் இவ்வருட இறுதியிலேயே ஜனாதிபதித்தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார்.


## கொழும்பு ஸ்ருடியோ

தொழில்நுட்பத்தில் 35வருட அனுபவம்வாய்ந்தவர்கள்
தரமான

★ Line Half tone and Colour Blocks
★ றபர் சீல் Rubber Stamps
★ சில்க் ஸ்கிறின் Silk Screen
★ Re - copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
தரமாகப் பெற்றுக் கொள்க.

**கொழும்பு ஸ்ருடியோ**
55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9617)



வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடாத்தப்படும்

## ★ கள்காட்சி கலைவிழா ★

இடம்:- கொத்தணி நடுவப் பணியகம் மானிப்பாய்.

காலம்;-

22 - 06 - 94 புதன்

★ காலை தொடக்கம் மாலை வரை ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9837)

# பேரினவாதக் கட்சிகள் இனப்பிரச்சினையில் அரசியல்லாபம் கருதியே என்றும் செயற்பட்டன

சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற முனையும் போது நமக்கே சிலந்தி வலையைப் பின்னி விடுகிறோம்-

- சர் வால்ட்டர் ஸ்காட்-

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 22-06-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஊர்வாயை மூடும் முயற்சி

அமெரிக்கத் தூதுவராலயத்தைச் சேர்ந்த இராஜதந்திரியொருவர் யாழ்ப்பாணம் வர எடுத்த முயற்சி சிறிலங்கா அரசாங்கத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நிலைமையை அறிந்து வருவதற்கென அமெரிக்க இராஜதந்திரி எடுத்த முயற்சியே அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டதாகும்.

ஆனால் இந்நிராகரிப்பு தனியாக அமெரிக்காவிற்கு மட்டுமல்ல, வெளிநாட்டு இராஜதந்திரிகள் அனைவருக்குமே பொதுவானது என்று கருதவேண்டும்- இதற்கு உதாரணங்களும் உண்டு- கடந்த வருடம் அவுஸ்திரேலிய அதிகாரி ஒருவரும், இவ்வருட ஆரம்பத்தில்நோாவே நாட்டு இராஜதந்திரி ஒருவரும் யாழ்ப்பாணம் வர எடுத்த முயற்சி சிறிலங்கா அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபின்னர் ஒரு நோர்வே நாட்டு இராஜதந்திரி யாழ். வந்திருந்தாராயினும் அவர் இராஜதந்திரி என்ற ரீதியில் வரவில்லை என்றும் சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

அதாவது வெளிநாட்டு அரசபிரதிநிதிகள் எவரும் வடக்கே வருவதை சிறிலங்கா அரசாங்கம் தடை செய்தே வருகின்றது- இதுவரையில் சிறிலங்கா அரசாங்கம் வடக்கே அனுமதித்தது - அதுவும் பெரும் தாமதத்தின் பின்னர்- வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளையுமே ஆகும்.

இவ்வாறாக சிறிலங்கா அரசு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வடக்கே வராமல் தடை விதிப்பதற்குக் காரணம், அது கூறிக்கொள்வது போல் நிலைமையைக் கண்டறிவதற்கு இராஜதந்திரி ஒருவர் தேவையில்லை என்பது உண்மையான காரணமல்ல- ஒரு வெளிநாட்டு இராஜதந்திரியை அனுமதிப்பதன் மூலம் இனப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையில் இருந்து சர்வதேசப் பிரச்சினை என்ற நிலை எட்டாமல் தடுப்பதற்கும், விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அரசுகளின் அங்கீகாரம் கிடைத்துவிடாமல் தடுப்பதற்குமே ஆகும்.

சிறிலங்கா அரசைப் பொறுத்து இனப்பிரச்சினையானது - 'பயங்கரவாதப் பிரச்சினை'- ஓர் உள்ளூர் பிரச்சினையாகும், கடந்த காலத்தில் இப்பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையீடு செய்திருப்பினும் இதனை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக ஏற்க அது தயாராக இல்லை- இந்நிலையிலேயே வடக்கிற்கு ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி விஜயம் செய்து அங்குள்ள மக்களின்

மொழிப்பிரயோகத்தில்ஆரம்பித்த இலங்கை இனப்பிரச்சினை அரசியல் சக்திகளின் பொருத்தமான அணுகுமுறை இன்மையாலேயே இன்றைய பரிதாப நிலைக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. காலத்துக்கு காலம் ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கங்கள் இப்பிரச்சினைக்கான அணுகுமுறையை மனிதாபிமான அடிப்படையில் நோக்கியிருந்தால் இன்றைய இக்கட்டான நிலைக்கு நாம் முகம் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

சுதந்திர இலங்கையில் மாறி மாறி ஆட்சியைக்கைப்பற்றிக் கொண்டுவரும் பேரினவாதக் கட்சிகளான ஐ. தே. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் 1950களிலிருந்து சிறுபான்மைத்தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை அணுகுவதில் பெரும்பாலும் அரசியல் லாபம் கருதியே செயற்பட்டு வந்துள்ளன,

இதற்கு சிறந்ததோர் உதாரணமாக இலங்கையில் 1955 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஓர் அரசியல் சம்பவத்தினை எடுத்துக் கூறலாம் இக்காலப் பகுதியில் பிரதமராகவிருந்த சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார் இங்கு பல கூட்டங்களில் கலந்து கொண்ட இவர் இறுதியாக கொக்குவிலில் ''யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்'' இன் தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் ஹன்டி பேரின்பநாயகம் சிங்களமும் தமிழும் நாட்டின் உத்தியோக பூர்வ மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரினார்.

இரண்டு மொழிகளையும் உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரிக்கும் கொள்கை கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சி அக்காலப்பகுதியில் இருந்ததால் அக்கூட்டத்திலேயே ''சிங்களத்தையும் தமிழையும் நாட்டின் உத்தியோக பூர்வ மொழியாக ஏற்று சமத்துவ அந்தஸ்து வழங்குவதற்கான ஏற்பாடு அரசியலமைப்பில் செய்யப்படும்'' என பெருந்திரளான மக்கள் முன்னிலையில் சேர். ஜோன் கொத்தலாவல உறுதி

தொரு அரசியல் சூழ்நிலையைக் காத்துக்கொண்டிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஐ. தே. கட்சியிலிருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கினார் சமஅந்தஸ்து என்றகொள்கையினால் பௌத்த சிங்களவர் மத்தியிலிருந்த இந்த உணர்ச்சிகளை இவர் தன்னுடைய அரசியல் லாபம் கருதியே பயன்படுத்தியிருந்தார்

1956 ஏப்ரலில் இடம்பெற்ற தேர்தலில் ''சிங்களம் மட்டும்'' என்ற கோஷத்தினை முன்வைத்து பிரசாரம் செய்ததினால் தேர்தலில் அமோக வெற்றியீட்டியமையை இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும்

இதற்கிடையில் தனிச்சிங்களத்திற்கு ஆதரவான கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் சிங்களப் பகுதிகளில் பெருமளவு நடைபெற்றன ஐ. தே கட்சியிலிருந்த பலர் ''சிங்களம் மட்டும்'' கோரிக்கைக்கு ஆதரவாக கட்சியிலிருந்து விலகி பண்டாரநாயக்காவுடன் இணையத் தொடங்கினர் இதனால் பிரதமர் கொத்தலாவலைக்கும் ஐ தே கட்சிக்கும் பல நெருக்குதல்கள் ஏற்பட்டன இந்த நெருக்குதலில் இருந்து தப்ப முடியாத நிலையில் 1956 பெப்ரவரியில் களனியில்நடைபெற்ற ஐ தே கட்சி கூட்டமொன்றில் ''சிங்களம் மட்டும்'' என்பதே ஐ தே கவின் கொள்கை என பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அறிவித்ததுடன் அடுத்த தேர்தலில் இதனேயே கோஷமாகக் கொள்வதாகவும் தீர்மானித்தார்-

எனவே பெரும்பான்மை இனக்கட்சிகள் இந்நாட்டு சிறுபான்மை இனமக்களின் உரிமைப்போராட்டத்தை எப்போதுமே இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு சாதாரண சிங்களமக்கள் மத்தியில் தமது அரசியல் செல்வாக்கை பெருக்கிக் கொள்ளவே பயன்படுத்தினார்கள் என்பது வெளிப்படை.

இவ்வாறான அரசியல் கலாசாரத்தில் வளர்ந்த பேரினவாத ஆட்சியாளர்கள் 1970களிலிருந்து சுமார் இரண்டரை தசாப்த காலங்களுக்கு மேலாக சிறுபான்மை இனமக்களின் பிரச்சினையை அடிப்படையாக வைத்து

னின்றே வந்தது. இதனால் தமிழ் பேசும் மக்கள் பேரினவாத ஆட்சியாளர்களால் மீண்டுமோர் தடவை ஏமாறப்பட்டனர்.

இதே போன்று 1977-ம் ஆண்டுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய ஐ. தே. கட்சி மீண்டுமோர் புதிய அரசியற்திட்டத்தை (தற்போது நடைமுறையிலிருப்பது) ஏற்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மீது அனுதாபம் கொண்டதுபோல் 'முதலைக் கண்ணீர்' வடித்து ஆட்சியைக் கைப்பற்றியது. இவர்கள் தேர்தல் பிரசார காலத்தில் தயாரித்த ''தேர்தல் விஞ்ஞாபனம்'' தமிழ் பேசும் மக்கள் சம்பந்தமாக பின்வருமாறு கூறியிருந்தது.

தமிழ் பேசும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர் என்பதை ஐ. தே. கட்சி ஏற்றுக்கொள்கிறது இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமலிருப்பது தனி நாடு ஒன்றை அமைப்பதற்கான இயக்கத்தைக் கூட ஆதரிப்பதற்கு அம்மக்களைத் தூண்டி உள்ளது தேசிய ஒருமைப்பாட்டின் நலனுக்காகவும் முழு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தியின் நலனைக்கருதியும் காலம் தாழ்த்தாமல் இந்தப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கருதுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வந்தால் கல்வி குடியேற்றம், தமிழ் மொழி உபயோகம், அரசாங்கத் துறைகளிலான வேலை வாய்ப்புக்களில் தமிழர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கும் அவர்களது அபிலாசைகளுக்கும் பரிகாரம் காண்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி அதன் முடிவுகளை அமுல் செய்வோம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தாலும் அவை செயலுருவம் பெற்றதா? என்ற வினாவுக்கு ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு தவாது'' என்ற பழமொழியினையே ஞாபக

அதாவது வரலாற்று ரீதியாக தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களில் பெரும்பான்மை இன மக்கள் அரசாங்க ஆதரவுடன் குடியேற்றப்பட்டனர் இதனால் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தை இழந்தனர் இதனால் இப்பகுதியின் சனத்தொகை புள்ளி விபரங்கள் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தின முக்கியமாக தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என இங்கு குறிப்பிட்டதன் அர்த்தம் குறிப்பிட்ட மக்கள் குறிப்பிட்ட பிரதேசத்திலேயே குடியமர வேண்டும் என்பதை தமிழ்பேசும் மக்கள் கருத்தாகக் கொள்ளவில்லை.

இலங்கைக் குடியரசில் எவரும் எந்த இடத்தில் வேண்டுமானாலும் தனது இஷ்டப்படி வாழ்வதற்கு உரிமை பெற்றுள்ளனர்- ஆனால் அரசியல் இலாபம் கருதிய குடியேற்றத்தினையே தமிழ் பேசும் மக்கள் அன்று தொட்டு இன்றுவரையும் வெறுத்து வருகின்றனர். மேலும் மொழி, உயர்கல்வி ஆகியவற்றில் தமிழ்பேசும் மக்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டது- உரிய தொழில் வாய்ப்புக்கள் வழங்கப் படவில்லை- மூலாதாரப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அரசியல் இலாபம் கருதி இழுத்தடிப்புக்கள் நடந்ததுடன் அண்மைக்கால ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பிரச்சினைக்கு பயங்கரவாத முலாம் பூசி இங்கு இனப் பிரச்சினையே இல்லை என்று கூறுமளவுக்கு தமிழ்பேசும் மக்கள் ஒதுக்கப் பட்டுள்ளனர்-

அதுமட்டுமன்றி எதற்கெடுத்தாலும் ஜனநாயகம் பற்றிப் பேசும் ஐக்கிய தேசிய கட்சி சிறுபான்மை மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல் வழிமுறைகளில் நாட்டம்கொள்ளாது இராணுவ பலத்தின் மூலம் பிரச்சினையை அணுக முன்வருகின்றமை இவர்களாகவே வகுத்துக் கொண்ட ''புதிய ஜனநாயக'' வழிமுறை என்றே கொள்ளவேண்டியுள்ளது- எனவே ஐக்கிய தேசியக் கட்சி தனது பதினேழு ஆண்டுகால அரசியல் நாடகத்தில் சிறுபான்மை

பலப்பரீட்சையாக நடந்து முடிந்த தென்மாகாண சபைத்தேர்தலும் அதன் முடிவுகளும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு கலக்கத்தினையும் பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கு எதிர்பாராத உற்சாகத்தையும் ஏற்படுத்தி இலங்கை அரசியலில் ஒரு சலசலப்பைக் காட்டியதுடன் ஆட்சியாளர்களுக்கு நல்லதோர் அரசியல் பாடத்தினையும் கற்றுக் கொடுத்திருந்தது.

முக்கியமாக தென்மாகாண சபைத்தேர்தல் பிரசாரத்தில் நாட்டின் தலைமைப்பீடம் பெருமளவிற்கு இனவாதத்தை அடிப்படையாக வைத்து தேர்தல் பிரசாரம் மேற்கொண்டதும் பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அணுகுமுறைக்கு அரசியல் வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டதாக தம்மை இனம் காட்டிக் கொண்டதும் தேர்தல் பிரசாரங்களின் போது ஒலித்த விடயங்கள்

இனப்பிரச்சினை தீர்வுக்கான அணுகுமுறையில் அரசியல் நடவடிக்கையினையே தென்மாகாண மக்கள் விரும்புகின்றனர் என்பதை உணர்த்தும் வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் பெருவெற்றி கண்டது இந்த வெற்றி மறைமுகமாகச் சுட்டியது என்னவெனில் இனப்பிரச்சினைக்கு ஆளும் கட்சியின் அணுகுமுறை தவறானது என்பதையேயாகும்

தென்மாகாண சபை வெற்றியினால் உற்சாகமடைந்த பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தற்போது பாராளுமன்றத்திலும் வெளியிலும் நடைபெறும் கூட்டங்களில் தம்மிடம் இனப்பிரச்சினை தீர்வுக்கு திட்டவட்டமான ''தீர்வுத்திட்டம்'' உள்ளதெனவும் அதனை வெகுவிரைவில் மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவோமெனவும் கூறி வருகின்றனர் இவ்வாறான

நாட்டுப் பிரதிநிதி விஜயம் செய்து அங்குள்ள மக்களின் பிரச்சினையையும், உணர்வையும் அறிந்து கொள்வதை சிறிலங்கா அரசாங்கம் விரும்பவில்லை. இதனை ஒரு வெளிநாட்டுத் தலையீடாகவே சிறிலங்கா அரசு கருது கின்றது.

அவ்வாறு வெளியுலகம் நேரடியாகத்தகவல் சேகரிப்பதென்பது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பாதகமான பல விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். குறிப்பாக சில பொருளாதார அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் அது முகம் கொடுக்க வேண்டிய நிலைகூட உருவாகலாம். ஏற்கனவே சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை ஸ்தாபனங்களின் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ள சிறிலங்கா அரசாங்கம், அரசுகளின் கண்டனங்களுக்கு உள்ளாவது விரும்பத்தக்கதொன்றாக இருக்கமாட்டாது.

அடுத்ததாக, இனப்பிரச்சினையின் கூர்மையையும் அதன் இன்றைய நிலையையும் அந்நிய அரசுகள் அறிந்து கொள்வதென்பது இன்றைய அரசியல், இராணுவ யதார்த்த நிலையை அவை புரிந்து கொள்ள உதவும். அது இனப்பிரச்சினை எவ்வளவு தூரம் சென்றுள்ளது- அதன் தீர்வை எந்தக் கட்டத்தில் ஏற்படுத்த முடியும் என்பதையும் அவர்கள் விளங்கிக்கொள்ள உதவக் கூடும். இந்நிலையில் இனப்பிரச்சினை குறித்து சிறில கா அரசு வெளியிடும் தகவல்கள், அரசாங்கத்தின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சிகளின் ஏமாற்று, போலித்தனம் என்பனவற்றையும் அவை மதிப்பீடு செய்து கொள்ள முடியும்,

இவை யாவற்றிற்கும் மேலாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு யாழ்ப்பாணம் செல்லும் இராஜதந்திரிகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியதே முக்கிய பிரச்சினையாகும்- இப்பேச்சுக்கள் மூலம் புலிகளுக்கு சர்வதேசஅங்கீகாரம் கிட்டிவிடும் என்பதுவே அரசின் பிரதான கவலையாகும், இதனால் நிலைமைகளைக் கண்டறிவதற்காக யாழ்ப்பாணம் செல்வதாக இராஜதந்திரிகள் கூறினாலும் அவர்கள் தமது கூற்றின் பிரகாரம் செயற்பாடுவார்களா? அதாவது யாழ்ப்பாணம் செல்பவர்கள் விடுதலைப் புலிகளைச் சந்திக்காமல் வருவார்களா என்பதே அதற்குள்ள சந்தேகமாகும்.

இந்நிலையில் தான் வெளிநாட்டு இராஜ தந்திரிகளை வடக்கே அனுமதிப்பதை சிறிலங்கா அரசு முற்றாகத் நிறுத்தியுள்ளது- ஆனால் சிறிலங்கா அரசு எண்ணுவது போல், இனப்பிரச்சினை உள்ளூர் பிரச்சினை என்ற கட்டத்தை எப்பொழுதோ தாண்டிவிட்டது என்பதும் விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டமும் அதன் திறமையான செயற்பாடுகள் குறித்தும் உலகம் ஏற்கனவே அறிந்து கொண்டுவிட்டது என்பதையும் எவரும் இனிமேல் மறைக்க முடியாது- இது ஊர்வாயை மூடும் செயலுக்கு ஒப்பானதாகும்-

மக்கள் முன்னிலையில் சேர். ஜோன் கொத்தலாவல உறுதியளித்திருந்தார்.

கொத்தலாவலையின் சம அந்தஸ்து என்ற கொள்கையை பிழையாக விளங்கிக் கொண்ட பௌத்த சிங்களத் தலைவர்கள் இதற்கு எதிராக தீவிர பிரசாரம் செய்ய முற்பட்டனர். இதனால் அக்காலப் பகுதியில் அரசியல் கொந்தளிப்பு நிலை காணப்பட்டது இதற்கிடையில் இப்படியான

இனமக்களின் பிரச்சினையை அடிப்படையாக வைத்து தமது அரசியல் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றனர். 1972-ம் ஆண்டில் புதிய அரசியல் திட்டத்தை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றியசிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டு முன்னணிஅரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்திருந்தும் அவற்றை அமுல்படுத்துவதில் பின்

கறிக்குதவாது'' என்ற பழமொழியினையே ஞாபகமூட்டுகிறது தேர்தல் விஞ்ஞாபனம் அழுத்தியுரைத்த விடயங்கள் பெருமளவு பூர்த்தி செய்யப்படாதிருக்கும் நிலையினையே இன்று நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் வேதனை மிகுந்த சூழ்நிலை என்பதை ஒவ்வொரு சிறுபான்மை இன மக்களும் உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

னேழு ஆண்டுகால அரசியல் நாடகத்தில் சிறுபான்மை இன மக்களை ''போடுகாய்களாக'' மதித்துச் செயல்பட்டுள்ளதையே கடந்தகால இவர்களது அரசியல் நடவடிக்கையிலிருந்து அறியமுடிகின்றது,

இந்நிலையில் தேர்தலாண்டாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள 1994-இல் பேரினவாதக் கட்சிகளிரண்டிற்கும்

ப்படுத்துவோமெனவும் கூறி வருகின்றனர் இவ்வாறான தொரு தீர்வுத்திட்டம் எவ்வாறானதாக அமையுமென தமிழ் பேசும் மக்கள் மட்டுமன்றி மிதவாத சிங்கள மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்

நன்றி - வீரகேசரி

ருவாண்டாவில்

## கிளர்ச்சியாளர் தாக்குதல் மேலும் தீவிரமாகியுள்ளது

(கிகாலி)

ருவாண்டாவின் தலைநகர் கிகாலியில்கிளர்ச்சிப்படைகள் அரசாங்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன.

இதனிடையே அரசாங்கப் படைகளுக்கும், கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே நடைபெறும் மோதலில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மீட்கப்பட்டிருப்பதாக ஐ. நா. அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும், ருவாண்டாவில் இராணுவ ரீதியில் தலையிடும் பிரான்சின் திட்டம் பற்றி விளக்குவதற்காக நைரோபியிலிருந்து பிரான்ஸ் தூதுவர் ஒருவர் ருவாண்டா சென்றுள்ளார்,

## தூதுக்குழுவில் இடம்பெற எதிர்க்கட்சிகள் மறுப்பு

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் புதுடில்லிக்கு சென்று குடியரசுத் தலைவரையும், பிரதமரையும் சந்தித்து 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத்தொடர்ந்து அமுல்படுத்த வற்புறுத்தும் தூதுக் குழுவில் இடம் பெற கம்யூனிஸ்ட் கட்சிகள் மறுப்பு தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியும் இத் தூதுக்குழுவில் இடம் பெறாது என்று ஏற்கனவே அறிவித்துள்ளது. ஆனால் தமிழ் நாடு மாநில பாரதிய ஜனதாக் கட்சி இத் தூதுக் குழுவில் இடம் பெற இருக்கிறது.

## ஈரானில் குண்டுவெடிப்பு; 70க்கும் அதிகமானோர் பலி

(தெகிரான்)

ஈரானின் வடகிழக்கு பகுதியிலுள்ள மசோர் என்னும் இடத்தில் மசூதி ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் எழுபதுக்கும் அதிகமானோர் கொலையுண்டனர் நூற்றுக்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர்.

இஸ்லாம் மதத்தின் ஷியா பிரிவின் ஞானியான இமாம் ரேய்சாவின் மசூதியில் தொழுகை நடந்து கொண்டிருந்த போது மேற்படி குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது,

மாகாண சபையை கலைக்க

## ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பது ஆளுநரின் கடமையல்ல

- எஸ். சர்வானந்தா

(கொழும்பு)

ஒரு மாகாண சபையைக் கலைப்பதற்காக ஜனாதிபதியுடன் ஒத்துழைப்பது ஆளுநரின் வேலையல்ல. மாறாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதல்வர் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றவும் அவரது இலக்குகளை எய்தவும் உறுதுணையாக இருக்க வேண்டியவர் ஆளுநர் ஆவார்- ஆளுநர் பதவியில் இருப்பவர் எப்போதும் முதல்வர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதை மனதில் கொள்ள வேண்டும்- இவ்வாறு மேல்மாகாண முன்னாள் ஆளுநர் எஸ் சர்வானந்தா சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்-

அவர் மேலும் கூறுகையில் தம்மை பதவியிலிருந்து விலக்குவதற்கு ஜனாதிபதி செயலகம் எடுத்த நடவடிக்கை ஒரு தன்னிச்சையானது என்றும் ஒரு வகையில் அதிகார துஷ்பிரயோகம்என்றும் குறிப்பிட்டார்- அரசியலமைப்பின் 13வது திருத்தம் ஆளுநர் ஒரு றப்பர் முத்திரைபோல செயற்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதல்ல- மாகாண ஆளுநர் என்பவர் ஒரு மாகாணத்தின் தலைவர் என்பதுடன் ஜனாதிபதியின் பிரதிநிதியுமாவார்- எனினும் மாகாண சபையைக் கலைப்பதற்காக ஜனாதிபதியுடன் ஒத்துழைப்பது ஆளுநரின் கடமையல்ல-

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-06-22**

**புதன் இரவு**

08.01- குயிலோசை வலுவளிக்கும் த னியங்கள் - கிராமிய நிகழ்வு
08.20- ஏர்முனை ''தன்கையேதனக்குதவி'' -தனிநடிப்பு
08.30- செய்திகள்
08.40- நாடகம் ''வெள்ளைப்பிரம்பு''

**1994-06-23**

**வியாழன் காலை**

07.02- மாவீரவணக்கம்
07.15- விடுதலை கீதங்கள்
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ஆதரவாளர்களிடையே நுவரெலியாவில் மோதல்

(நுவரெலியா)

நுவரெலியா நகரப் பகுதியில் அமைச்சர் காமினிதிசாநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும், மாநகர முதல்வர் திருமதி நளின் திலகா ஹேரத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றுள்ளது,

காமினி திசாநாயக்காவிற்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டதை வரவேற்கும் முகமாக நுவரெலியா நகரில் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ய முற்பட்ட வேளையிலேயே இம் மோதல்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கத்திகள், வாள்கள் என்பவற்றுடன் குடிபோதையில் காமினி ஆதரவாளர் காணப்பட்டனர்.

# பிரித்தானியர் வகுத்த எல்லையை பேணுவதால் பிரச்சினை தீராது

## சு. க. செயலாளர் சேனநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அமைப்பு நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

''லக்திவ'' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் இக் கருத்தைத் தெரிவித்த அவர் ''பிரித்தானியர் மேற்கொண்ட எல்லை மாற்றங்களினால் இன்று மக்களிடையே இவ்வாறான பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே இன்று அவ் எல்லைகளை பாதுகாப்பதினால் பிரச்சினை தீரப்போவதில்லை'' என்றார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு இந்த அரசாங்கத்தினால் தீர்வை முன் வைக்க முடியாது. இது இன்று நாட்டின் தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இதன் மூலமே அரசியல் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ள முடியும். இப் பிரச்சினைக்கு சுதந்திரக் கட்சி உட்பட பிரதான கட்சிகள் உள்ளடங்கிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் தேர்தலுக்கு பின்னர் இது தொடர்பாக விரிவான பேச்சுகள் நடத்தப்படும்.

அரசாங்கம் யுத்தத்திற்கு முடிவுகட்டுவதற்குப் பதிலாக யுத்தத்தை ஒரு வியாபாரமாக கருதுகின்றது. இந்நிலையில் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் எமது கட்சி ஆட்சியில் இந்த திட்டம் முன்வைக்கப்படும். இதன் மூலம் மட்டுமே பிரச்சினைக்கு தீர்வுஏற்படும். நாடு பிரிவது தவிர்க்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார்

## வீரவணக்கக் கூட்டம்

6-ம் மாதத்தில் வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டம் நல்லூர் வட்டத்தைச்சேர்ந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றிரவு 8.00 மணிக்கு கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

6-ம் மாதத்தில் வீரச்சாவடைந்த தென்மராட்சிக் கோட்டம் சாவகச்சேரி வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்றிரவு 8.00 மணிக்கு மட்டுவில் அ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. கலைநிகழ்ச்சிகளும்இடம்பெறும்

# வடக்கு - கிழக்கு இணைப்பு சு. க. எதிர்க்கிறது

## - சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

எமது கட்சி வடக்கு-கிழக்கு இணைப்பை இப்போதும் எதிர்க்கின்றது. இவ்விடயத்தில் எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்

இரு மாகாணங்களுக்கும் தனித்தனியாக தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அதிகார பரவலாக்கலை அமுல் செய்து அவர்கள் தமது விடயங்களை தாமே கவனித்துக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசு போலன்றி நாம் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை காண்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புடனும் கலந்தாலோசனை நடத்திவருகின்றோம். விடுதலைப் புலிகளுடன் என்ன நிபந்தனையில் பேச்சு நடத்துவோம் என்பதை நாம் தேர்தலில் வெற்றிபெற்று அரசு அமைக்க முன்பு கூறமுடியாது.

இவை குறித்து பொருத்தமான நேரத்தில் முடிவுகளை எடுப்போம் எனவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார்.


### தேவை

யாழ். நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள எழுதுவினைஞர் தேவை. வயதெல்லை 40 - 55 வரை சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

விள. இல 336
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (8625)




# தேர்தல் வன்முறைகளுக்கு முகங்கொடுக்க பயிற்சி

## - சு. க. வழங்க முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின் போதும் நடைபெறவுள்ள வன்முறைகளுக்கும் கள்ளவாக்கு பதிதலுக்கும் முகங்கொடுக்கத் தக்க வகையில் வாக்காளருக்குப் பயிற்சி வழங்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருலட்சம் இளைஞர்களுக்கு மாத்தறையில் வைத்துப் பயிற்சி வழங்கப்பட இருப்பதாகவும் இப் பயிற்சியை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியும் சு. க. பாராளுமன்ற உறுப்பினருமான அனுருத்தரத்வத்த வழங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் மங்கள சமரவீரவின் தலைமையிலேயே இப்பயிற்சிக்கு இளைஞர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தேர்தல் தொகுதி மட்டத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சியில் தினமும் 300 தொடக்கம் 500 வரையானோர் பயிற்சி பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

---

### வடக்கே

பின் வடபகுதிக்கு எந்தவொரு வெளிநாட்டு இராஜதந்திரியையும் அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை அரசு கொண்டிருப்பதாகவும் முன்னர் இவ்வாறு அவுஸ்திரேலியத் தூதரக பிரதிநிதி ஒருவருக்கும் வடபகுதி செல்ல அனுமதி வழங்கப்படவில்லை எனவும் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

நோர்வே பிரதிநிதி ஒருவர் மட்டும் நோர்வே அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவர் என்ற ரீதியில் இது வரையில் வடபகுதிக்கு அனுப்பப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### விமானக் குண்டு

ளத் தடைகளை வென்று தமிழ் மக்களை அமை

# நடிகர் ரஜனிக்கு எதிராக ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

ஜேர்மனியில் கலைநிகழ்ச்சி ஒன்றை நடத்தச் சென்ற நடிகர் ரஜனிகாந்திற்கு அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்

ஐரோப்பிய நாடுகளில் கலைநிகழ்ச்சிகளைநடத்தச் சென்ற இவருக்கு சுவிட்சர்லாந்து நாட்டிலும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது ரஜனிகாந் மீது கண்டனம் தெரிவிக்கும் சுவரொட்டிகளை ஈழப்படை எனும் அமைப்பு ஒட்டியிருந்தது-

இது குறித்து தமிழ் அகதிகள் அமைப்பு ரஜனிகாந்திற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது-

அக்கடிதத்தில், தங்களைச் சந்திக்கவிரும்பும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களில் 99 வீதத்தினர் ஈழத் தமிழ் அகதிகள், அவர்களுக்கு ஒரு நாடில்லை அரசில்லை என்ற நிலையில் உலகின் பல பாகங்களிலும் அகதிகளாய் வாழ்

### 923 படையினருக்கு

(பூ) பன்லாரில் தமது முகாம் தாக்கப்பட்டபோது 25 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு முகாமிலிருந்து உதவி கோரிய அதிகாரிகளுக்கும் கூட விருது வழங்கப்படுகிறது இன்னும் இப் பட்டியல் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தமது பெயரைக்கூட விருது வழங்கலுக்காக சிபார்சு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது 1990ஜூலை 3-ம் திகதியன்று யாழ் கோட்டைக்குள் வானூர்தியில் சென்று இறங்கியதாக கூறி


பொருளற்ற பெண் என்றால் உயிரற்ற சடமா?
இருளுக்குள் வாழ்வது தான் இவர்களின் விதியா?


# பயங்கரவாதப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே தேவை

## - டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

''பயங்கரவாதப் பிரச்சினை'' அரசியல் ரீதியான தீர்வு மூலமே முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் இராணுவரீதியிலாக அல்ல என நாம் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். அரசு பேச்சுவார்த்தைகளுக்கு தயார்என்றும் கூறியுள்ளோம் இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

சண்டேலீடர் எனும் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்துக் கட்சி மாநாடு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் என பல வடிவங்களில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை.

அண்மைக் காலத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வு ஒன்றுக்கு வந்தது. இதை ஐ. தே. க. மற்றும் சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளும் ஏற்றுக்கொண்டன, ஆனால் தெரிவுக் குழுவிடம் விடுதலைப் புலிகள் தீர்வுத்திட்டம் எதையும் கொடுக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானப் பேச்சுக்கு கதவுகள் திறந்துள்ளன

## பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அமைதியை நிலைநாட்ட அரசு உறுதி பூண்டுள்ளது. இது தொடர்பாக சமாதானப் பேச்சுக்கள் நடத்த கதவுகள் திறந்தே உள்ளன என பிரதமர் ரணில் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்

# சிறிலங்காவிற்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்துக

## பிரிட்டன் அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

பிரிட்டனைச் சேர்ந்த நான்கு அமைப்புகள் சிறிலங்காவுக்கு யுத்த ஆயுதங்களை விறபனை செய்யவோ அன்றி வழங்கவோ கூடாது என கூட்டாகச் சமர்ப்பித்த மனு ஒன்றின் மூலம் கேட்டுள்ளன.

சென்ற 11-ம் திகதி பிரிட்டனில் நடைபெற்ற மாநாடொன்றிலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. சிறிலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை ஆராய்ந்த பின்னர் இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனநாயக அமைப்பு, மனித உரிமைகள் அமைப்பு. இலங்கையின் ஜனநாயகமும் சமாதானமும் தொடர்பான அமைப்பு மற்றும் தமிழ் அமைப்புகளும் இதில் கலந்து கொண்டதாக தெரியவருகின்றது.

பல அமைப்புகளும் அங்கத்துவம் பெற்றுள்ளன.

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் அமைப்புகளுக்கும் இத் தீர்மானம் அடங்கிய முடிவு அனுப்பப்பட்டுள்ளது. இதில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அழிப்பு நடவடிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

---

### கோப்பி

ட்சார்த்த ரீதியில் பாவனைக்குட்படுத்தி மதிப்பு வாய்ந்தவர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது

இப்பானம் வைபவ ரீதியாகப் பொது மக்களின் பாவனைக்கு இன்று மு. ப. 11-00 மணிக்கு மானிப்பாயில் அமைந்துள்ள வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

## யாழ். மாவட்ட விவசாயிகளிற்கான அறிவித்தல்

### 01. விதை உருளைக்கிழங்கு விண்ணப்பப்படிவம்

1994/95 கால போகத்திற்கான விதை உருளைக் கிழங்கு தேவையானோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து 27-06-1994 இற்கு முன்னர் பசுமை விவசாய சேவை நிலையங் களிலோ அல்லது கமநல சேவை நிலையங்களிலோ கையளிக்கவும்.

### 02. விதை நெல்

1994/95 கால போகத்தில் பி. ஜி. 500 இன விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் அருகிலுள்ள பசுமை விவசாய சேவை நிலையங்களில் ஒரு புசல் நெல்லுக்கு 200/- வீதம் 15-07-1994 இற்கு முன்பு முற்பணம் கட்டி பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின் றீர்கள். முற்பணம் கட்டியவர்களிற்கு மாத்திரமே மேற்படி விதை நெல் கொண்டுவரப்பட்டு விநியோ கிக் கப்படும்.

### 03. குரக்கன் கொள்வனவு

தங்களிடம் உள்ள தீட்டிய குரக்கன் ஒருகிலோ 26/- வீதம் பசுமை விவசாய சேவை நிலையங்களால் கொள் வனவு செய்யப்படும்.

### 04. குரக்கன் செய்கைக்கான மண்ணெண்ணெய் விநியோகம்

1994/95 கால போகத்தில் குரக்கன் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிற்கு பசுமை விவசாய சேவை நிலையங்களூடாக மேலதிக மண்ணெண்ணெய் வழங் கப்படும்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

(சி-9858)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### விமானக் குண்டு

ளத் தடைகளை வென்று தமிழீழத்தை அமைப்போம், நேரில் நின்று போரிடாத நீ வானிலிருந்து குண்டு வீசாதே, மதிகெட்ட அரசே மக்களை கொல்லவா விமானப்படை, அராஜக அரசே கூர்ந்துகேள் அதோ கேட்கிறது தமிழரின் முரசு போன்ற பல கண்டன கோஷங்களை எழுப்பியவாறு கலந்துகொண்டனர். (சி)

### விமானக்

வேலிப்பகுதியில் நடாத்தப் பட்ட குண்டு வீச்சில் பலி யான சின்னத்தம்பியை என க்கு கடந்த 25வருடங்களாக தெரியும். அவர் மரணமடை ந்த செய்தி கேட்டுமிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

நான் கொழும்புசென் றிருந்தபோது இத்தகைய விமானத் தாக்குதல் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் தெரிவித்த போது அவர் இத்தகைய குண்டு வீச்சுகளினால் எது வித நன்மையும் கிடைக்கு மென நான் நினைக்கவில்லை உடனடியாக விமானப்படை அதிகாரிகளுக்கு இதுகுறித்து அறிவிக்கிறேன் எனக் கூறி னார் என அரச அதிபர் கூடியிருந்த மக்கள் மத்தியில் தெரிவித்தார். (சி)

3-ம் திகதியன்று யாழ் கோட் டைக்குள் வானூர்தியில் சென்று இறங்கியதாக கூறி ஸ்டுவார்டன்லீடர் வசந்த வைத்தியரத்னாவுக்கும் கூட விருது வழங்கப்பட்டுள்ளது ஆனால் இவரது நடவடிக் கைக்கு உதவிய ஏனை யோர் புறக்கணிக்கப்பட்டுள் ளனர் இன்னும் லெப் ஜெனரல் டென்சில் கொப் பேகடுவ. மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண போன் றோர்உட்படபலர்விருதுவழங் கலில் புறக்கணிக்கப்பட்டுள் ளனர். அத்துடன் ஜே வி.பி. யினரின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்ட ஆயுதப் படையினரும் கூட புறக் கணிப்புக்கு உள்ளாகியுள்ள னர். இராணுவத்தினருக்குள் இருக்கும் அரசியல் போட்டி யின் விளைவாகவே இப்புறக் கணிப்புகள் இடம் பெற்றிருப் பதாகக் கூறப்படுகிறது.

### வாக்காளர்

பொதுத் தேர்தல்களில் படை யினர் வாக்காளர்களாக வாக் களிக்க வசதியாகவே இந் நட வடிக்கை எடுக்கப்படுகிறது.

நாடில்லை அரசில்லை என்ற நிலையில் உலகின் பல பாகங் களிலும் அகதிகளாய் வாழ் கின்றனர். உங்களுக்கு ஒரு நாடுண்டு, அரசுகள் உண்டு. தாயகம் எம்மைக் காப்பாற் றும் கைவிடாது என்ற நம் பிக்கையில் அகதிகளாக வந்த ஈழத் தமிழர்களை உங்கள் நாடும் உங்கள் அரசும் எப்படி நடத்துகிறது? உங்கள் நாடும் உங்கள் அரசும் கவனிக்காத உங்கள் நாட்டு அனாதைக் குழந்தைகளுக்காக நீங்கள் சேவை செய்ய முன்வந்தது பாராட்டுக்குரியது தான் ஆனால் அவர்களுக்கு உதவு வதற்காக ஈழத் தமிழ் அகதி களிடமா கையேந்திவர வேண்டும்? இங்கேவந்து இந்த அகதிகளிடம் கையேந்தும் காலத்தில் அங்கேயே ஒரு பட த்தில்நடித்தால் அந்தப்பணம் இங்கே கிடைப்பதைவிட கூடு தலாக இருக்குமே? என தெரிவிக்கப்பட்டுள்ளது.

றும் தமிழ் அமைப்புகளும் இதில் கலந்து கொண்டதாக தெரியவருகின்றது.

இதில் சிறிலங்கா சிங்கள, தமிழ், முஸ்லிம்களும் பிரித் தானிய பாராளுமன்ற உறுப் பினர்களும், பிரித்தானியப் பிரசைகளின் ஜனநாயக அமைப்பு உட்பட மேலும்

ந்துாள வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற் றுக்கொண்டிருக்கும் கண்கா ட்சிமண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### ஞானம்மா பேதுருப்பிள்ளை

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி ஞானம்மா பேதுருப்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர் மானிப்பாய் சென் ஆன்ஸ்) காலமானார். இவர் காலஞ்சென்றசிறை ச்சாலை அதிகாரி பேதுருப்பிள்ளையின் (சக்கிறிஸ்ரன்) அன்பு மனைவியும் திருமதி லூட்ஸ்மேரி, திருமதி எலிசபேத்தம்மா, திருமதி மேரி திரேசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை) திரு. யேசுதாசன் பேதுருப் பிள்ளை (மக்கள் வங்கி கன்னாதிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ய. மரியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி), திரு சுவாம்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்), திரு- டா- ஞானப்பிரகாசம் (தொழில் நுட்பவியலாளர்), திருமதி நவமலர் அவர் களின் அன்பு மாமியாரும் ஆவார்- அன்னாரின் இறு திக் கிரியைகள் 22-06-94 இன்று புனிதபேதுரு பாவிலு ஆலயத்தில் பிற்பகல் 3·30 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்-

நவாலி தெற்கு,
மானிப்பாய்-
(8627)

தகவல்:
யே. பேதுருப்பிள்ளை
(மகன்)

### DR. இராமனாதர் அம்பலவாணர்

பொன்னாவளை களபூமி காரைநகரைச் சேர்ந்த DR. இராமனாதர் அம்பலவாணர் காரைநகரில் கால மானார்- இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தவநாயகி (அதிபர், கலாநிதி ஆ- தியாகராசா ம- ம- வி- காரைநகர்), தவபாலன் (கணக்காளர்) சாந்த குமாரி (சட்டத்தரணி) ஆகியோரின் அருமைத் தந்தை யும், பாலசிங்கம் (மக்கள்வங்கி, ஊர்காவற்றுறை கிளை) சிவபாதம் (மாவட்டக் காரியாலயம், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), தேவகி (கொழும்பு) ஆகியோரின் அருமை மாமனாரும், ஜனகன், ரூபன், தர்சிகா ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் 19-06-1994 ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் நடை பெற்றன- இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்-

620A, ஓட்டுமடம்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்-

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்
(8626)


யாழ். ஸ்ரீதரில்
Aronold Schwarzenegger
நடித்த
PREDATOR
தினசரி
மாலை 4, 6மணி
சனி. ஞாயிறு
காலை 10. 30 மணி
மாலை 4, 6மணி
(சி- 9822)



தித்திக்கும் தேன் சுவை செய்தி!
உணவு சிற்றுண்டி வகைகளுக்கு
பெயர் பெற்ற
கிருஷ்ண விலாஸ்
இன்று முதல்
தித்திக்கும் தின் பண்டங்கள்
விலைகள் குறைக்கப்பட்டு புதுப் பொலிவுடன்
திறக்கப்படுகின்றது
கிருஷ்ண உணவகம்
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
(8628)